
# கிருபையை போக்கடித்தவர்கள் - பாகம் 3 (சவுல் தொடர்ச்சி)



இத்தியானத்தின் முந்தின பகுதியில் (பாகம் 2 இல்), சவுல் எவ்வாறு தேவனால் எளிய நிலையில் இருந்து தெரிந்து கொள்ளப்பட்டு, எந்தவித சிரமமும் இன்றி நேரடியாக சமஸ்த இஸ்ரவேலின் மேலும் முதலாவது ராஜாவாக தெரிந்து கொள்ளப்பட்டதை கண்டோம். ஆனால் சவுலோ, தேவன் கிருபையாய் சாமுவேலின் மூலமாய் தன்னை ராஜாவாக அபிஷேகித்து ஏற்படுத்தின பொழுதும், தேவனுக்கோ, சாமுவேலிற்கோ கீழ்ப்படியாமல், தன் ராஜ்ஜிய மேன்மையையே அவர் பெரியதாக எண்ணினார். தேவனுடைய சித்தத்தை செயல்படுத்துவதை காட்டிலும் தன் பதவியை காப்பாற்றிக் கொள்வதையும், அதன் மூலம் உண்டாகும் சுகபோகத்தை அனுபவிக்கவுமே முற்பட்டார். இதனால் இறுதியில், தேவன் சவுலை ராஜாவாக்கினதற்காக மனஸ்தாபப்படும்படியாய் செயல்பட்டார். சாமுவேலும் இதற்காக வேதனைப்பட்டார். ஆனால் ஆண்டவரோ சவுலை தள்ளி தாவீதை ராஜாவாக்க சித்தம் கொண்டு, சாமுவேலின் மூலமாகவே தாவீதையும் அபிஷேகித்தார். சவுல் இதை முதலாவது அறியவில்லை, ஆனால் சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது 14,000 என்ற ஆர்ப்பரிப்பை, அவர் எப்பொழுது கேட்டாரோ, அப்பொழுதே தேவ திட்டத்தை உணர்ந்து கொண்டார். ஆனால் அவருடைய பதவி ஆசை, சுகபோக வாழ்வு அவரை தேவத்திட்டத்திற்கு எதிராக செயல்பட வைத்தது. தாவீதை கொள்வதன்

மூலம் தெய்வத்திட்டத்தை தடை செய்துவிடலாம் என்று முட்டாள்தனமாக எண்ணினார். அதனால் ஆண்டவர் தந்த இஸ்ரவேல் தேசத்தை, இராஜாவாக இருந்தது காப்பதை விட்டுவிட்டு, தாவீதை வேட்டையாடுவதிலேயே முனைப்பு காட்டினார். இறுதியில் அவருடைய முடிவு பரிதாபமாக இருந்தது. இவை யாவும் நமக்கு எச்சரிப்பாய் வேத புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது. இதனை நாம் இப்பாகத்தில் தொடர்ந்து தியானிப்போமாக.

1 சாமுவேல் 19:1 கூறுகிறது "**தாவீதைக் கொன்றுபோடும்படிக்கு, சவுல் தன் குமாரனாகிய யோனத்தானோடும் தன் ஊழியக்காரர் எல்லாரோடும் பேசினான்.**" என்று. ஆனால் 1 சாமு 19:4,5 வசனங்களில் "**அப்படியே யோனத்தான் தன் தகப்பனாகிய சவுலோடே தாவீதுக்காக நலமாய்ப் பேசி, ராஜா தம்முடைய அடியானாகிய தாவீதுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதிருப்பாராக; அவன் உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்யவில்லை; அவன் செய்கைகள் உமக்கு மெத்த உபயோகமாயிருக்கிறதே. அவன் தன் பிராணனைத் தன் கையிலே வைத்துக்கொண்டு, அந்தப் பெலிஸ்தனைக் கொன்றதினாலே, கர்த்தர் இஸ்ரவேலுக்கெல்லாம் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டதை நீர் கண்டு, சந்தோஷப்பட்டீரே; இப்போதும் முகாந்தரமில்லாமல் தாவீதைக் கொல்லுகிறதினால், குற்றமில்லாத இரத்தத்திற்கு விரோதமாக நீர் பாவஞ்செய்வானேன் என்றான்.**". இதனால் "**சவுல் யோனத்தானுடைய சொல்லைக் கேட்டு: அவன் கொலைசெய்யப்படுவதில்லை என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு ஆணையிட்டான்.**" (1 சாமு 19:6). ஆனால் 1 சாமு 19:9,10 கூறுகிறது "**கர்த்தரால் விடப்பட்ட பொல்லாத ஆவி சவுலின்மேல் வந்தது; அவன் தன் வீட்டில் உட்கார்ந்து, தன் ஈட்டியைக் கையிலே பிடித்துக்கொண்டிருந்தான்; தாவீது தன் கையினாலே சுரமண்டலம் வாசித்தான். அப்பொழுது சவுல்: தாவீதை ஈட்டியினாலே சுவரோடே சேர்த்து உருவக் குத்திப்போடப் பார்த்தான்; ஆனாலும் இவன் சவுலுக்கு விலகினதினாலே, அவன் எறிந்த ஈட்டி சுவரிலே பட்டது; தாவீதோ அன்று இராத்திரி ஓடிப்போய், தன்னைத் தப்புவித்துக்கொண்டான்.**" மறுபடியும் மறுபடியும், பொல்லாத ஆவியின் பிடியில் அகப்பட்டு சவுல் தவறான காரியங்களையே செய்தார். 1 சாமு 20:30-34 வசனங்களில் "**அப்பொழுது சவுல் யோனத்தான்மேல் கோபமூண்டவனாகி, அவனைப் பார்த்து: இரண்டகமும் மாறுபாடுமுள்ளவளின் மகனே, நீ உனக்கு வெட்கமாகவும், உன் தாயின் மானத்திற்கு வெட்கமாகவும், ஈசாயின் மகனைத் தோழனாகத் தெரிந்துகொண்டிருக்கிறதை நான் அறியேனோ? ஈசாயின் மகன் பூமியின்மேல் உயிரோடிருக்கும் நாள்வரையும் நீயானாலும் உன்**

**ராஜ்யபாரமானாலும் நிலைப்படுவதில்லை; இப்போதே அவனை அழைப்பித்து, என்னிடத்தில் கொண்டுவா; அவன் சாகவேண்டும் என்றான். யோனத்தான் தன் தகப்பனாகிய சவுலுக்குப் பிரதியுத்தரமாக: அவன் ஏன் கொல்லப்படவேண்டும்? அவன் என்ன செய்தான் என்றான். அப்பொழுது சவுல்: அவனைக் குத்திப்போட அவன்மேல் ஈட்டியை எறிந்தான்; ஆகையால் தாவீதைக் கொன்றுபோடத் தன் தகப்பன் தீர்மானித்திருக்கிறான் என்பதை யோனத்தான் அறிந்துகொண்டு, கோபதாபமாய் பந்தியைவிட்டு எழுந்திருந்துபோய், அமாவாசியின் மறுநாளாகிய அன்றையதினம் போஜனம்பண்ணாதிருந்தான்; தன் தகப்பன் தாவீதை நிந்தித்துச் சொன்னது அவனுக்கு மனநோவாயிருந்தது.**"

மேற்கண்ட வசனங்களில் சவுலின் எண்ணம் தெளிவாக வெளிப்படுகிறது "**ஈசாயின் மகனைத் தோழனாகத் தெரிந்துகொண்டிருக்கிறதை நான் அறியேனோ? ஈசாயின் மகன் பூமியின்மேல் உயிரோடிருக்கும் நாள்வரையும் நீயானாலும் உன் ராஜ்யபாரமானாலும் நிலைப்படுவதில்லை; இப்போதே அவனை அழைப்பித்து, என்னிடத்தில் கொண்டுவா; அவன் சாகவேண்டும் என்றான்** " (வசனம் 31) என்று கூறுவதில் இருந்து தன் ராஜ்யபாரத்தை காப்பாற்றவே அவர் தாவீதை கொல்ல நினைத்தார் என்று வெளிப்படுகிறது. இந்த கோபத்தின் உச்சகட்டமாக, எந்த மகனுக்காக அவர் தாவீதை அழிக்க நினைத்தாரோ அதே மகன் மேல் தன் ஈட்டியை எறிந்தது, எந்த அளவு அவர் கர்த்தரின் கட்டுப்பாட்டில் இருந்து வெளியேறி பிசாசின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறார் என்பதை விளக்குகிறது. ஆனால் யோனத்தானுக்கோ தன் தகப்பன் தன் மீது ஈட்டியை எறிந்ததை காட்டிலும் தாவீதை நிந்தித்து சொன்னதே அவனுக்கு வேதனையாய் இருந்தது (வசனம் 34). சவுல் தாவீதை மட்டுமல்ல தன்னை சுற்றியுள்ள அனைவரையுமே பகைக்க ஆரம்பித்தார். தன் பிள்ளைகளே தனக்கு எதிராக இருப்பதாக நினைத்தார். இதன் உச்சகட்டமாக "**பின்பு ராஜா தன்னண்டையிலே நிற்கிற சேவகரை நோக்கி: நீங்கள் போய், கர்த்தருடைய ஆசாரியர்களைக் கொல்லுங்கள்; அவர்கள் கையும் தாவீதோடே இருக்கிறது; அவன் ஓடிப்போகிறதை அவர்கள் அறிந்திருந்தும், அதை எனக்கு வெளிப்படுத்தவில்லை என்றான்; ராஜாவின் வேலைக்காரரோ, கர்த்தருடைய ஆசாரியர்களைக் கொல்லத் தங்கள் கைகளை நீட்ட சம்மதிக்கவில்லை. அப்பொழுது ராஜா தோவேக்கை நோக்கி: நீ போய் ஆசாரியர்களைக் கொன்றுபோடு என்றான்; ஏதோமியனாகிய தோவேக்கு ஆசாரியர்கள்மேல் விழுந்து, சணல்நூல் ஏபோத்தைத் தரித்திருக்கும் எண்பத்தைந்துபேரை அன்றையதினம் கொன்றான்.**" (1 சாமு 22:17,18). இங்கு கர்த்தருடைய

ஆசாரியர்களையே கொலை செய்யும்படியாய் அவருடைய நிலைமை பரிதாபத்திற்குரியதாய் மாறிப்போனது. கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சாமுவேலினால் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டு நடத்தப்பட்ட சவுல், இன்று கர்த்தருடைய ஆசாரியர்களை கொல்லும் அளவிற்கு மாறிப் போனார். ஆனால் "**தாவீது வனாந்தரத்திலுள்ள அரணான ஸ்தலங்களிலே தங்கி, சீப் என்னும் வனாந்தரத்திலிருக்கிற ஒரு மலையிலே தரித்திருந்தான்; சவுல் அநுதினமும் அவனைத் தேடியும், தேவன் அவனை அவன் கையில் ஒப்புக்கொடுக்கவில்லை.** " (1 சாமு 23:14). இங்கு நான் கவனிக்க வேண்டியது சவுல் அனுதினமும் தாவீதை தேடியும், தேவன் தாவீதை சவுல் கையில் ஒப்புக்கொடுக்கவில்லை என்பதாகும்.

மேலும் "**அப்பொழுது சவுலின் குமாரனாகிய யோனத்தான் எழுந்து, காட்டிலிருக்கிற தாவீதினிடத்தில் போய், தேவனுக்குள் அவன் கையைத் திடப்படுத்தி: நீர் பயப்படவேண்டாம்; என் தகப்பனாகிய சவுலின் கை உம்மைக் கண்டு பிடிக்கமாட்டாது; நீர் இஸ்ரவேலின்மேல் ராஜாவாயிருப்பீர்; அப்பொழுது நான் உமக்கு இரண்டாவதாயிருப்பேன்; அப்படி நடக்கும் என்று என் தகப்பனாகிய சவுலும் அறிந்திருக்கிறார் என்றான்.**" (1 சாமு 23:16,17). தேவன் தாவீதை ராஜாவாக்கவே தெரிந்து கொண்டார் என்பதை அறிந்திருந்தும், தேவத் திட்டத்திற்கு எதிராகவே செயல்பட்டார். ஆனால் ஆண்டவரோ கிருபையாய் சவுலை காப்பாற்றினார். தாவீது சவுலை கொல்ல அருமையான தருணம் கிடைத்தும், அவர் கர்த்தரால் அபிஷேகம் பண்ண பட்டவர் என்று, அவரைக் கொல்லாமல் "**கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயம் விசாரித்து, கர்த்தர் தாமே என் காரியத்தில் உமக்கு நீதியைச் சரிக்கட்டுவாராக; உம்முடைய பேரில் நான் கைபோடுவதில்லை. முதியோர் மொழிப்படியே, ஆகாதவர்களிடத்திலே ஆகாமியம் பிறக்கும்; ஆகையால் உம்முடையபேரில் நான் கைபோடுவதில்லை. இஸ்ரவேலின் ராஜா யாரைத் தேடப் புறப்பட்டார்? ஒரு செத்த நாயையா, ஒரு தெள்ளுப்பூச்சியையா, நீர் யாரைப் பின்தொடருகிறீர்? கர்த்தர் நியாயாதிபதியாயிருந்து, எனக்கும் உமக்கும் நியாயந்தீர்த்து, எனக்காக வழக்காடி, நான் உம்முடைய கைக்குத் தப்ப என்னை விடுவிப்பாராக என்றான்.**" (1 சாமு 24:12-15). அப்பொழுது சவுல் "**தாவீது இந்த வார்த்தைகளைச் சவுலோடே சொல்லி முடிந்தபின்பு, சவுல்: என் குமாரனாகிய தாவீதே, இது உன்னுடைய சத்தமல்லவா என்று சொல்லி, சத்தமிட்டு அழுது, தாவீதைப் பார்த்து: நீ என்னைப்பார்க்கிலும் நீதிமான்; நீ எனக்கு நன்மை செய்தாய்; நானோ உனக்கு தீமை செய்தேன். நீ எனக்கு நன்மை செய்ததை இன்று விளங்கப்பண்ணினாய்; கர்த்தர்**

**என்னை உன் கையில் ஒப்புக்கொடுத்திருந்தும், நீ என்னைக் கொன்றுபோடவில்லை. ஒருவன் தன் மாற்றானைக் கண்டுபிடித்தால், அவனைச் சுகமே போகவிடுவானோ? இன்று நீ எனக்குச் செய்த நன்மைக்காகக் கர்த்தர் உனக்கு நன்மை செய்வாராக. நீ நிச்சயமாக ராஜாவாய் இருப்பாய் என்றும், இஸ்ரவேலின் ராஜ்யபாரம் உன் கையில் நிலைவரப்படும் என்றும் அறிவேன். இப்போதும் நீ எனக்குப் பின்னிருக்கும் என் சந்ததியை வேரறுப்பதில்லை என்றும், என் தகப்பன் வீட்டாரில் என் பெயரை அழித்துப்போடுவதில்லை என்றும் கர்த்தர்மேல் எனக்கு ஆணையிட்டுக் கொடு என்றான். அப்பொழுது தாவீது சவுலுக்கு ஆணையிட்டுக் கொடுத்தான்; பின்பு, சவுல் தன் வீட்டுக்குப் புறப்பட்டுப்போனான்; தாவீதும் அவன் மனுஷரும் அரணிப்பான இடத்திற்கு ஏறிப்போனார்கள்.**“ (1 சாமு 24:16-22). இங்கு வசனம் 20இல் “**நீ நிச்சயமாக ராஜாவாய் இருப்பாய் என்றும், இஸ்ரவேலின் ராஜ்யபாரம் உன் கையில் நிலைவரப்படும் என்றும் அறிவேன்** “ என்று கூறுவதில் இருந்து அவரே சாட்சியாக தாவீதை குறித்த தேவ திட்டத்தை அறிக்கையிடுகிறார். மேலும் வசனம் 21இல், சவுலுக்குள் இருந்த வேறொரு பயமும் வெளிப்படுகிறது. அது தன்னை மட்டுமல்ல, தன் சந்ததியையும் தாவீது அழித்துப் போடுவானோ என்பதாகும். சவுலை கொல்ல வாய்ப்பு கிடைத்தும், அவரைக் கொல்லாமல் தாவீது தப்பவிட்டிருந்தும், சவுலுக்கோ வேண்டாத இப்படிப்பட்ட பயங்கள், அவர் விட்டு விலக தயாராக இராதிருந்த அரச பதவியின் மூலம் அவருக்கு உண்டானது. இவ்வாறாக தாவீது சவுலுக்கு ஆணையிட்டுக் கொடுத்த பிறகும், சவுல் தாவீதை பின்தொடர்ந்து கொல்ல நினைத்ததை கைவிடவில்லை.

இதே போன்று மற்றொரு சந்தர்ப்பத்திலும், ஆண்டவர் தாவீது சவுலை கொல்லாமல் தப்பவிட்டார். “**பின்பு சீப்ஊரார் கிபியாவிலிருக்கிற சவுலிடத்தில் வந்து: தாவீது எஷிமோனுக்கு எதிரான ஆகிலாமேட்டில் ஒளித்துக்கொண்டிருக்கிறான் என்றார்கள். அப்பொழுது சவுல்: சீப்வனாந்தரத்திலே தாவீதைத் தேடும்படி எழுந்து, இஸ்ரவேலிலே தெரிந்துகொள்ளப்பட்ட மூவாயிரம் பேரோடுங்கூட, சீப் வனாந்தரத்திற்குப் புறப்பட்டுப்போனான்.**“ (1 சாமு 26:1,2). இங்கு மற்றொரு முறை ஆண்டவர் தாவீதின் கைக்கு சவுலை தப்புவித்தார். இங்கு தாவீது வசனம் 1 சாமு 26:9 இல் “**தாவீது அபிசாயைப் பார்த்து: அவரைக் கொல்லாதே; கர்த்தர் அபிஷேகம் பண்ணுவித்தவர்மேல் தன் கையைப் போட்டு, குற்றமில்லாமற்போகிறவன் யார்? என்று சொன்னான்.**“ என்று கூறுவதிலிருந்து சவுலுக்கு கொடுக்கப்பட்ட அபிஷேகத்தின் மேன்மையை வெளிப்படுத்துகிறார். ஆனால் சவுலோ தனக்கு கிருபையாக கொடுக்கப்பட்ட

இந்த ராஜ்ய மேன்மையின் அபிஷேகத்தை சற்றும் உணராமல் மாண்டு போனார்.

மேலும் "**தாவீது கடந்து, அந்தப் பக்கத்திற்குப் போய், தங்களுக்கும் அவர்களுக்கும் நடுவே போந்த இடமுண்டாக, தூரத்திலிருக்கிற மலையின் கொடுமுடியிலே, ஜனங்களுக்கும் நேரின் குமாரனாகிய அப்னேருக்கும் நேராக நின்று கூப்பிட்டு: அப்னேரே, உத்தரவு சொல்லமாட்டீரா என்றான்; அதற்கு அப்னேர்: ராஜாவுக்கு நேராகக் கூக்குரலிடுகிற நீ யார் என்றான். அப்பொழுது தாவீது அப்னேரை நோக்கி: நீர் வீரன் அல்லவா? இஸ்ரவேலில் உமக்குச் சரியானவன் யார்? பின்னை நீர் உம்முடைய ஆண்டவனாகிய ராஜாவைக் காக்காமற் போனதென்ன? ஜனத்தில் ஒருவன் உம்முடைய ஆண்டவனாகிய ராஜாவைக் கொல்லும்படி வந்திருந்தானே. நீர் செய்த இந்தக் காரியம் நல்லதல்ல; கர்த்தர் அபிஷேகம்பண்ணின உங்கள் ஆண்டவனை நீங்கள் காக்காமற் போனபடியினால், நீங்கள் மரணத்திற்குப் பாத்திரவான்கள்; இப்போதும் ராஜாவின் தலைமாட்டில் இருந்த அவருடைய ஈட்டியும் தண்ணீர்ச் செம்பும் எங்கே என்று பாரும் என்றான்.**" (1 சாமு 26:13-16).

இங்கு அப்னேர் பதில் கூறுவதற்கு முன்பாகவே "**அப்பொழுது சவுல்: தாவீதின் சத்தத்தை அறிந்து, என் குமாரனாகிய தாவீதே, இது உன் சத்தமல்லவா என்றான். அதற்குத் தாவீது: ராஜாவாகிய என் ஆண்டவனே, இது என் சத்தந்தான் என்று சொல்லி,** " (1 சாமு 26:17). "**அதற்குத் தாவீது: ராஜாவாகிய என் ஆண்டவனே, இது என் சத்தந்தான் என்று சொல்லி, பின்னும்: என் ஆண்டவனாகிய நீர் உம்முடைய அடியானை இப்படிப் பின்தொடருகிறது என்ன? நான் என்ன செய்தேன்? என்னிடத்தில் என்ன பொல்லாப்பு இருக்கிறது? இப்பொழுது ராஜாவாகிய என் ஆண்டவன் தம்முடைய அடியானுடைய வார்த்தைகளைக் கேட்பாராக; கர்த்தர் உம்மை எனக்கு விரோதமாக எடுத்து விட்டதுண்டானால், அதற்கு அவர் காணிக்கையை ஏற்றுக்கொள்வாராக; மனுபுத்திரர் அதைச் செய்தார்களேயாகில், அவர்கள் கர்த்தருக்கு முன்பாகச் சபிக்கப்படக்கடவர்கள்; அவர்கள்: நீ போய்; அந்நிய தேவர்களைச் சேவி என்று சொல்லி, அவர்கள் இன்று என்னைக் கர்த்தருடைய சுதந்தரத்திற்கு அடுத்தவனாயிராதபடிக்கு, துரத்திவிட்டார்களே. இப்போதும் கர்த்தருடைய சமுகத்தில் என் இரத்தம்**

**தரையில் விழாதிருப்பதாக; மலைகளில் ஒரு கவுதாரியை வேட்டையாடுகிறதுபோல, இஸ்ரவேலின் ராஜா ஒரு தெள்ளுப்பூச்சியைத் தேடவந்தாரோ என்றான்."** (1 சாமு 26:17-20). இங்கு தாவீது தெளிவாக, சவுல் தன்னை பின் தொடர்வதில் அர்த்தம் ஏதும் இல்லை என்பதை தெளிவுபடுத்தினார். அப்பொழுது சவுல், "**அப்பொழுது சவுல்: நான் பாவஞ்செய்தேன்; என் குமாரனாகிய தாவீதே, திரும்பிவா; என் ஜீவன் இன்றையதினம் உன் பார்வைக்கு அருமையாயிருந்தபடியால், இனி உனக்கு ஒரு பொல்லாப்புஞ் செய்யேன்; இதோ, நான் மதியற்றவனாய் மகா பெரிய தப்பிதஞ்செய்தேன் என்றான்."** (1 சாமு 26:21). "**அதற்குத் தாவீது: இதோ, ராஜாவின் ஈட்டி இங்கே இருக்கிறது; வாலிபரில் ஒருவன் இப்புறம் வந்து, அதை வாங்கிக் கொண்டுபோகட்டும். கர்த்தர் அவனவனுக்கு அவனவன் நீதிக்கும் உண்மைக்கும் தக்கதாகப் பலன் அளிப்பாராக; இன்று கர்த்தர் உம்மை என் கையில் ஒப்புக்கொடுத்திருந்தும், கர்த்தர் அபிஷேகம்பண்ணினவர்மேல், என் கையை நீட்ட மனதில்லாதிருந்தேன். இதோ, உம்முடைய ஜீவன் இன்றையதினம் என் பார்வைக்கு எப்படி அருமையாயிருந்ததோ, அப்படியே என் ஜீவனும் கர்த்தரின் பார்வைக்கு அருமையாயிருப்பதினால், அவர் என்னை எல்லா உபத்திரவத்திற்கும் நீங்கலாக்கி விடுவாராக என்றான்."** (1 சாமு 26:22-24). இங்கு தெளிவாக ஆண்டவர் சவுலுக்கு கொடுத்திருக்கும் கிருபையான தருணத்தை பற்றி கூறுகிறார்.

இறுதியாக "**அப்பொழுது சவுல் தாவீதை நோக்கி: என் குமாரனாகிய தாவீதே, நீ ஆசீர்வதிக்கப்பட்டவன்; நீ பெரிய காரியங்களைச் செய்வாய், மேன்மேலும் பலப்படுவாய் என்றான்; அப்படியே தாவீது தன் வழியே போனான்; சவுலும் தன் ஸ்தானத்திற்குத் திரும்பினான்."** (1 சாமு 26:25). இங்கு சவுல் தன் தவறை உணர்ந்தவராய் தாவீதை ஆசிர்வதித்து கூறும் காரியங்களை காணலாம். ஆனால் அவர் ஆண்டவரை விட்டு வெகு தூரமாய் சென்று விட்டார். இதனால் "**பெலிஸ்தர் கூடிவந்து, சூநேமிலே பாளயமிறங்கினார்கள்; சவுலும் இஸ்ரவேலர் எல்லாரையும் கூட்டினான்; அவர்கள் கில்போவாவிலே பாளயமிறங்கினார்கள். சவுல் பெலிஸ்தரின் பாளயத்தைக் கண்டபோது பயந்தான்; அவன் இருதயம் மிகவும் தத்தளித்துக்கொண்டிருந்தது. சவுல் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்போது,**

**கர்த்தர் அவனுக்குச் சொப்பனங்களினாலாவது, ஊரீமினாலாவது, தீர்க்கதரிசிகளினாலாவது மறுஉத்தரவு அருளவில்லை.**“ (1 சாமு 28:4-6). இங்கு ஆண்டவர் சவுலுக்கு பிரதியுத்தரம் தராமல் இருந்த பொழுது, தன்னை தேவனிடத்தில் தாழ்த்தி, தன் பாவங்களை அறிக்கையிட்டு மனம் திரும்பாமல், அதற்கு எதிர் திசையில் பயணித்தார். “**அப்பொழுது சவுல் தன் ஊழியக்காரரை நோக்கி: அஞ்சனம்பார்க்கிற ஒரு ஸ்திரீயைத் தேடுங்கள்; நான் அவளிடத்தில் போய் விசாரிப்பேன் என்றான்; அதற்கு அவனுடைய ஊழியக்காரர்: இதோ, எந்தோரில் அஞ்சனம்பார்க்கிற ஒரு ஸ்திரீ இருக்கிறாள் என்றார்கள். அப்பொழுது சவுல் வேஷம் மாறி, வேறு வஸ்திரம் தரித்துக்கொண்டு, அவனும் அவனோடேகூட இரண்டுபேரும் இராத்திரியிலே அந்த ஸ்திரீயினிடத்தில் போய்ச் சேர்ந்தார்கள்; அவளை அவன் நோக்கி: நீ அஞ்சனம்பார்த்து எனக்குக் குறிசொல்லி, நான் உன்னிடத்தில் சொல்லுகிறவனை எழும்பிவரச்செய் என்றான்.**“ (1 சாமு 28:7,8). ஆனால் “**அதற்கு அந்த ஸ்திரீ: சவுல் அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறிசொல்லுகிறவர்களையும், தேசத்தில் இராதபடிக்கு நிர்மூலமாக்கின செய்தியை நீர் அறிவீரே; என்னைக் கொன்றுபோடும்படி நீர் என் பிராணனுக்குக் கண்ணிவைக்கிறது என்ன என்றாள்.** “ (1 சாமு 28:9). இங்கு தெளிவாக கர்த்தருடைய வார்த்தையின்படி அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறிச்சொல்கிறவர்களையும் தன் தேசத்தில் இராதபடி நிர்மூலமாக்கினாரோ, அவரே இன்று கர்த்தர் தன்னுடன் பேசாதபடியால், பொல்லாத ஆவினால் பிடிக்கப்பட்ட அவர், பிசாசின் ஆவியிடமே சென்று தனக்கு என்ன நேரிடும் என்று விசாரிப்பது அவர் இஸ்ரவேலின் ராஜாவாக இருந்தும், பிசாசின் இராஜ்யத்திற்கு அடிமையாய் இருந்தார் என்பதை வெளிப்படுத்துகிறது.

இதனால் “**அதற்குச் சாமுவேல்: கர்த்தர் உன்னைவிட்டு விலகி, உனக்குச் சத்துருவாய் இருக்கும்போது, நீ என்னிடத்தில் கேட்பானேன்? கர்த்தர் என்னைக்கொண்டு சொன்னபடியே செய்து முடித்து, ராஜ்யத்தை உன் கையிலிருந்து பறித்து, அதை உன் தோழனாகிய தாவீதுக்குக் கொடுத்துவிட்டார். நீ கர்த்தருடைய சொற்கேளாமலும், அமலேக்கின்மேல் அவருக்கு இருந்த கோபத்தின் உக்கிரத்தைத் தீர்க்காமலும் போனபடியினால், கர்த்தர் இன்றையதினம் உனக்கு இந்தப்பிரகாரமாகச் செய்தார். கர்த்தர் உன்னுடைய ஜனமாகிய**

இஸ்ரவேலரையும் பெலிஸ்தர் கையில் ஒப்புக் கொடுப்பார்; நாளைக்கு நீயும் உன் குமாரரும் என்னோடிருப்பீர்கள்; இஸ்ரவேலின் பாளயத்தையும் கர்த்தர் பெலிஸ்தரின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றான்." (1 சாமு 28:16-19). இங்கு சாமுவேலின் ஆவி உண்மையோ அல்லது பிசாசின் தந்திரமோ என்பது நாம் தியானிக்க வேண்டிய ஒன்று. ஆனால் அந்த ஆவி கூறியதெல்லாம் நடந்தது குறிப்பாக வசனம் 16இல் "அதற்குச் சாமுவேல்: கர்த்தர் உன்னைவிட்டு விலகி, உனக்குச் சத்துருவாய் இருக்கும்போது, நீ என்னிடத்தில் கேட்பானேன்?.", ஆம் கர்த்தர் சவுலை விட்டு விலகினது மட்டுமின்றி, சவுல் ஆண்டவருக்கு பிரியம் இல்லாத சத்துருவாய் மாறிப் போனார். இங்கு ஆவியிலும், ஆத்மாவிலும் உண்டான பலவீனம் அவருடைய சரீரத்தையும் பலவீனப்படுத்து. "அந்தக்ஷணமே சவுல் நெடிதாங்கிடையாய்த் தரையிலே விழுந்து, சாமுவேலின் வார்த்தைகளினாலே மிகவும் பயப்பட்டான்; அவன் இராப்பகல் முழுதும் ஒன்றும் சாப்பிடாதிருந்தபடியினால், அவன் பலவீனமாயிருந்தான்." (1 சாமு 28:20).

இதனால் இறுதியாக, 1 சாமு 31:1-6 வசனங்களில் "பெலிஸ்தர் இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணினார்கள்; இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்தோடி, கில்போவா மலையிலே வெட்டுண்டு விழுந்தார்கள். பெலிஸ்தர் சவுலையும் அவன் குமாரரையும் நெருங்கித் தொடர்ந்து, சவுலின் குமாரராகிய யோனத்தானையும் அபினதாபையும் மல்கிசூவாவையும் வெட்டிப்போட்டார்கள். சவுலுக்கு விரோதமாய் யுத்தம் பலத்தது; வில்வீரர் அவனைக் கண்டு நெருங்கினார்கள்; அப்பொழுது சவுல் வில்வீரரால் மிகவும் காயப்பட்டு, தன் ஆயுததாரியை நோக்கி: அந்த விருத்தசேதனம் இல்லாதவர்கள் வந்து, என்னைக் குத்திப்போட்டு, என்னை அவமானப்படுத்தாதபடிக்கு, நீ உன் பட்டயத்தை உருவி, என்னைக் குத்திப்போடு என்றான்; அவனுடைய ஆயுததாரி மிகவும் பயப்பட்டதினால், அப்படிச் செய்யமாட்டேன் என்றான்; அப்பொழுது சவுல் பட்டயத்தை நட்டு அதின்மேல் விழுந்தான். சவுல் செத்துப்போனதை அவன் ஆயுததாரி கண்டபோது, அவனும் தன் பட்டயத்தின்மேல் விழுந்து, அவனோடேகூடச் செத்துப்போனான். அப்படியே அன்றையதினம் சவுலும், அவன் மூன்று குமாரரும், அவன் ஆயுததாரியும், அவனுடைய எல்லா மனுஷரும் ஒருமிக்கச் செத்துப்போனார்கள்.". இங்கு சவுல்,

யோனத்தான் உள்பட, அவர் மூன்று குமாரரும் ஒருமிக்க மடிந்தார்கள். அதிலும் சவுலின் முடிவு பரிதாபமாய் இருந்தது. ஆம் அருமையாய் தன் ஓட்டத்தை ஆரம்பித்த சவுல், இறுதியில் அனைத்து கிருபைகளையும் இழந்தவராய், தேவனுக்கே சத்துருவாய் மாறி தன் வாழ்க்கை ஓட்டத்தை முடித்தார். இது நமக்கு ஒரு எச்சரிப்பின் செய்தியாய் உள்ளது. எந்தவித தகுதியும் இன்றி இருந்த அவரை ஆண்டவர் ராஜாவாய் தேர்ந்தெடுத்த பொழுது, அவருக்கு இருந்த மனநிலை, கொஞ்சம் கொஞ்சமாக மாறி, இறுதியில் தேவனுக்கு எதிராக திரும்புவதற்கு காரணம், அவர் தேவனை விட தேவன் தந்த ஆசீர்வாதங்களை (அரச பதவி) அதிகமாய் எண்ணியது, அந்த அரச பதவியை, தன் அதிகாரத்தை தக்க வைப்பதே அவர் குறிக்கோளாய் இருந்ததே தவிர, தேவ சித்தத்தை பற்றியோ, திட்டத்தைப் பற்றியோ அவர் கவலைப்படவில்லை. தேவன் அவரை சாமுவேல் மூலமாய் எச்சரித்தும், மனந்திரும்பாமல், செய்த தவற்றையே மறுபடியும் மறுபடியும் செய்து, இறுதியில், தேவனுக்கே சத்துருவாய் மாறிப் போனார். இதுவே தேவன் தந்த கிருபையை போக்கடித்தவராய், அவர் வாழ்வை முடிவிற்கு கொண்டு வந்தது. எனவே ஆண்டவர் தந்த ஆசிர்வாதங்கள், நன்மைகள், மேன்மைகள் என எல்லாவற்றைக் காட்டிலும் தேவனையே பெரியதாக எண்ணுவோமாக. தேவன் பலமுறை எச்சரித்தும், மற்ற மனிதர்கள் மூலம் இடைப்பட்டும், தொடர்ந்து சவுல் கடினப்பட்டு போனது போல் நாம் வாழாதிருப்போமாக. தேவன் தாமே தம்முடைய மாறாத கிருபையை நமக்கு அருள்வாராக. ஆமென், அல்லேலூயா.